

நீலகிரி மாவட்டம் உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், மகளிர் திட்டம் சார்பில் நடைபெற்ற மகளிர் சுய உதவிக்குழுக்கான மாபெரும் வங்கிக்கடன் உதவிகள் வழங்கும் விழாவில் அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் கலந்து கொண்டு, 278 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.39.83 கோடி தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கி கிளைகளின் மூலம் தொழில் தொடங்க வங்கிக் கடன் உதவிகளை வழங்கினார். உடன் நகரமன்றத் தலைவர் திருமதி. வாணீஸ்வரி, திருமதி.சுசீலா, திருமதி.பரிமளா, ரவிக்குமார், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் உதவி திட்ட அலுவலர்கள் ரமேஷ், திருமதி.ஜெயராணி உட்பட பலர் உள்ளனர்.

### கோவை காந்திபுரம் பகுதியில் கட்டப்பட்டு வரும்

# நூலகம் அறிவு சார் மைய கட்டுமானப் பணிகள் - சாலைப் பணிகள்!

## நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு!

கோவை, ஜீன் 13 -

கோவை காந்திபுரம் பகுதியில் கட்டப்பட்டு வரும் நூலகம் அறிவு சார் மைய கட்டுமானப் பணிகள் மற்றும் சாலைப் பணிகளை பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், கோவை மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன், காந்திபுரம் பகுதி கழக செயலாளர் ஆர்.எம்.சேதுராமன், வட்டக் கழகச் செயலாளர்கள் கே.ராமநாதன், விஜயகுமார், மாமன்ற உறுப்பினர் வித்யா ராமநாதன் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



அமைச்சர் செய்தியாளரிடம் கூறியதாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூரில் ஒரு நூலகம் அமைக்க வேண்டும் என்று முடிவு செய்து அந்த நூலகத்திற்கு பெரியார் அறிவு உலகம் என்ற பெயரை சூட்டி அவரின் திருக்கரத்தால் 06.11.2024 அன்று இந்தப் பணியை துவக்கி வைத்தார்கள். தொடர்ந்து இந்தப் பணி முடிவடையை அடைய வேண்டும் என்ற அடிப்படையில் மூன்றாவது முறையாக இந்த ஆய்வை மேற்கொண்டு இருக்கிறேன். ரூபாய் 245 கோடி மதிப்பீட்டில் இந்த நூலாகத்தின் கட்டிடமும் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புத்தகங்களும் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கணினி உள்ளிட்டவைகளை சேர்த்து 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,98,000 சதுர அடி பரப்பளவில் தரை தளம் உட்பட ஏழு தலங்கள் கொண்ட நூலகமாக இந்த நூலகம் அமைய இருக்கிறது. இதற்காக தமிழக அரசின் சார்பில் ஏழு ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. டிசம்பர் மாத இறுதியில் இப்பணிகள் முடிக்கும் வகையில் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் அனைத்து துறைகளின் சார்பிலும் சான்றிதழ்கள் பெறப்பட்டு விட்டன. இதில் 90 ஆயிரம் புத்தகங்கள் வர இருக்கிறது.

தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் எக்சிலேட்டர் பொருத்தப் படவுள்ளது. 4 லிப்ட் வசதிகள் செய்யப்பட இருக்கிறோம், கழிவு நீர் சுத்திகரிப்பு வசதிகள், 200 நான்கு சக்கர வாகனங்கள் 450 இருசக்கர வாகனங்கள் நீக்கப்படும் வகையில் வசதி செய்யப்பட்டுள்ளது. ஏறத்தாழ 305 இருக்கைகள் கொண்ட உள் கலையரங்கம் அமைக்க இருக்கிறோம். அதில் அறிவியல் மையயம், குழந்தைகள் நூலகம், போட்டித் தேர்வு நூலகம், மாற்றுத்திறனாளிகளுக்கு தனிப்பிரிவு, தமிழ் நூல்களுக்கு தனி பிரிவு, தொழில் நிறுவன திறன் மேம்பாட்டு மையம், வார இதழ், மாத இதழ் போன்ற பருவ இதழ்களை படிக்க தனியிடம், ஆங்கில நூல்களுக்கு தனி பிரிவு, டிஜிட்டல் நூலகம், அறிவியல் மையம் போன்ற பல்வேறு புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தி பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு இருக்கி றார்கள்.

இங்கு முறையாக தரமாக கம்பிகள், மணல், எம் ஸ்டாண்ட், கல், சாயல், ஸ்டீல், சிமெண்ட், தண்ணீர் அனைத்தும் முறையாக டெஸ்ட் செய்யப்பட்டு சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. குறிப்பிட்ட காலகட்டத்தில் இந்த நூலகம் கட்டாயம் திறக்கப்படும்.

மேற்கு புறவழிச்சாலை இரண்டாவது கட்டத்திற்கு எல்லையில் முடிந்து டெண்டர் விடும் நிலைக்கு வந்திருக்கிறோம். மூன்றாவது கட்டத்திற்கு நில எடுப்பு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதை மாவட்ட ஆட்சித்தலைவர் தொடர்ந்து ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்.

கோவை மாவட்டத்தின் முக்கியமான கோல்ட் விங்ஸ் உப்பிலிபாளையம் மேம்பால பணிகள் 10 கிலோமீட்டர் தொலைவிற்கு தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அதற்கு கீழ் நடை பாதை உடன் கூடிய 1.5 மீட்டர் டிரைன் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் 8 இடங்களில் இறங்குபாலம், ஏறுபாலம் பணிகள் நடைபெறுகிறது. ஒரு இறங்கு பாலம் நீதிமன்றத்தில் உள்ளது. மீதி 7 பாலத்தில் 5 பாலப் பணிகள் நிறைவடைந்து விட்டது, மீதி 2 பாலப் பணிகள் இன்னும் 15 நாட்களில் நிறைவடைந்து விடும். 95 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ளன, மீதி 5 சதவீதம் ரயில்வே டிராக், அதற்கு பல்வேறு வகைகளில் அனுமதி பெற வேண்டிய சூழ்நிலை அது மாவட்ட ஆட்சியரின் பெரு முயற்ச்சி, பொறியாளரின் பெரும் முயற்சியின் காரணத்தினால் ரயில்வே துறை இப்பொழுது அனுமதி வழங்கி உள்ளது.

30.07.2025 க்குள் இந்தப் பணிகள் முழுமை அடைந்து விடும் அதன்பின் முதலமைச்சர் அவர்கள் இந்த பாலத்தை திறந்து வைப்பார்கள். மேலும் டிசம்பர் மாத இறுதிக்குள் நூலகப் பணிகள் முடிக்கப்பட்டு பெரியாரின் அறிவு உலகம் என்ற அடிப்படையில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலைச்சர் அவர்களின் திருக்கரங்களால் ஜனவரி மாதம் இந்த நூலகம் திறப்பு விழா காணப்படும் என்றார்.

சிங்காநல்லூர் மேம்பாலம் ஒன்றிய அரசின் கீழ் வருவதாகவும் புதிய வரையறை போடப்பட்டு அனுமதிக்காக அனுப்பி வக்கப்பட்டுள்ளது, அதை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டுதான் இருக்கிறோம்.

கோவை திருச்சி சாலை விரிவாக்க பணிகள் குறித்தான கேள்விக்கு பதில் அளித்த அவர், நான் அமைச்சரான பொழுது கிரீன் பீல்ட் சாலை என்று 3,500 கோடி மதிப்பீட்டில் செய்யப் போகிறோம் என்ற அறிவிப்புடன் கிடந்தது. இது சம்பந்தமாக நான் நேரில் சென்று ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரியிடம் கேட்டு முறைக்கு இரண்டு முறை வலியுறுத்தி அதனை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று முடிவு செய்து 380 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த திட்டத்தை டெண்டர் அளவிற்கு கொண்டு வந்து விட்டு மொத்த பொறுப்பையும் பொறுப்பேற்றுக் கொண்டது தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை அடியேன் நான் என கூறினார்.

திருவண்ணாமலையில் தமிழக வெற்றி கழகத்தின் பாரதிதாசன் பண மாலை அணிவித்து பின்னர் மன்னிப்பு கேட்டுக் கொண்டது குறித்தான கேள்விக்கு பதில் அளித்த அவர், அவர் என்ன செய்தார் என்று எனக்கு தெரியாது என்னை பொறுத்தவரை அவர் என்னுடைய வாக்காளர் சென்ற முறை அவர் எனக்கு வாக்களித்தவர். இன்னும் சொல்லப்போனால் அது வந்து கூட்டுக் குடும்பம், அவரது அண்ணன், தம்பிகள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறார்கள், எனக்கு நெருக்கமான குடும்பம் அந்த குடும்பத்தை பொருத்தவரை எனக்கு நெருக்கமானவர்கள் தான் அவர்கள் இல்லம் கட்டினார்கள் அதற்கான பத்திரிக் கையை என்னிடம் கொடுத்து கண்டிப்பாக வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள் நான் பொதுவாக கட்சியை பார்ப்பவன் கிடையாது திருவண்ணா மலை பொறுத்தவரை யார் எனக்கு அழைப்பு கொடுத்தாலும் நான் அந்த சட்டமன்றத்தின் உறுப்பினர் என்னை மதித்து வந்து அழைப்பிதழ் கொடுத்த காரணத்தினால் நான் அந்த விழாவில் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்து விட்டு வந்தேன் அவ்வளவுதான் என்னுடைய சப்ஜெக்ட் என செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

---

இதுவரை ரூ.6 கோடியே 25 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 25 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்)** 11–06–2025 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | எம்.எஸ்.விலங்கையன், சடையாண்டி நகர், போடி, தேனி மாவட்டம். | 25,000/– |
| 2. | இரா.சீனிவாசன், சித்தநாயக்கன்பாளையம், கரடிவாவி வழி, கோவை | 25,000/– |
| 3. | எம்.பழனிசாமி, கடம்பூர், குத்தியாலத்தூர், சத்தியமங்கலம், ஈரோடு | 25,000/– |
| 4. | சி.ராஜாமணி, 23வது வார்டு, தென்கரை, பெரியகுளம், தேனி மாவட்டம். | 25,000/– |
| 5. | பி.தங்கராஜ், பாலசமுத்திரம், பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம் | 25,000/– |
| 6. | அ.ஜகுபர்சாதிக், மேற்கு தெரு, புதுவலசை, மண்டபம், இராமநாதபுரம் | 25,000/– |
| 7. | கு.பகவதிராஜ், பேரூர் முன்னாள் அவைத்தலைவர், மேலகரம், தென்காசி | 25,000/– |
| 8. | க.கருப்பசாமி, வேம்படிகாலனி, பத்மநாபமங்கலம், தூத்துக்குடி மாவட்டம். | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

---

### நீலகிரி மாவட்டத்தில் பெய்த பெரும் மழை - இயற்கைச் சீற்றம்! இரவு பகல் பாராமல்

# மிகவும் சிறப்பாகப் பணியாற்றிய மாவட்ட நிர்வாகத்திற்கு பாராட்டு!

## சட்டப்பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் இலட்சுமணன் தெரிவித்தார்!

சென்னை, ஜூன் 13 -

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் (2024-2026) தலைவர் இலட்சுமணன், நீலகிரி மாவட்டத்தில், கடந்த மாதத்தில் பெய்த பெரும் மழை மற்றும் இயற்கை சீற்றத்திலிருந்து பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் இரவு பகல் பாராமல் மிகவும் சிறப்பாக பணியாற்றியமைக்காக மாவட்ட ஆட்சித்த லைவர் மற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கு பாராட்டுக்களை தெரிவித்தார்.



கோவை பீளமேடு அண்ணா நகர் அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் கிராமக்கோயில் பூசாரி நல வாரிய உறுப்பினர் அடையாள அட்டையை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் வழங்கினார். இதில் கோவை மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் மெட்டல் எம்.ராஜாமணி, அறங்காவலர் குழு உறுப்பினர் சு.தனபால் ஆகியோர் உள்ளனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் வடக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி அன்னதானத்தை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ரத்தினவேல் வழங்கினார். இதில் ஒன்றிய நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டம், உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் (2024-2026) ஆய்வுக் கூட்டம், தலைவர் லட்சுமணன் மற்றும் குழுவின் உறுப்பினர்கள் தேவராஜ், பாண்டியன், வில்வநாதன் ஆகியோர் தலைமை யிலும், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையிலும் நேற்று முன்தினம் (11.06.2025) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் தெரிவித்ததாவது :

நீலகிரி மாவட்டத்தில் சமீபத்தில் ஏற்பட்ட மழை மற்றும் இயற்கை சீற்றத்தினால் மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் சிறப்பான முறையில் பணியாற்றிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் எனது சார்பாகவும், குழுவின் சார்பாகவும் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய ஆய்வுக்கூட்டத்தில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஆகியவை குறித்து குழு விவாதிக்கப்பட வுள்ளது. ஆகவே சம்மந்தப்பட்ட அலுவலர்கள் குழுவிற்கு முன்பாக சரியான தகவல்களை தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் புதுமைப்பெண் திட்டம், தமிழ் புதல்வன் ஆகிய திட்டங்கள் குறித்தும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கேட்டறிந்தார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், உதகை வருவாய் கோட்டாட்சியர் சதீஷ்குமார், ஆவின் பொது மேலாளர் மரு.ஜெயராமன், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.பிரவீணா தேவி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி பிரம்மவித்யா நாயகி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) திருமதி. வாணி, உதவி இயக்குநர் (கிராம ஊராட்சி) சரவணன், சட்டமன்ற பேரவை குழுவின் இணைச் செயலாளர்கள் பூபாலன், திருமதி. சாந்தா, சிறப்பு அலுவலர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் முனை வர் ஸ்ரீராம், தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் சென்னை திருமதி.வெ. சவிதா, நிதி கட்டுப் ப்பாட்டு அலுவலர் நா.பிரபாகரன், மேற்பார்வை பொறியாளர் நீலகிரி மின் பகிர்மான வட்டம் பொறிஞர் க.சேகர், துணை நிதி கட்டுப்பாட்டு அலுவலர் ம் சுரேஷ், கணக்கு மேற்பார்வையாளர் நீலகிரி மின் பகிர்மான வட்டம் கு.த.பெலிக்ஸ் பிரபாகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தஞ்சை ந. பூபதி

**ஜூன் 13 (2006)**



**தஞ்சை நகரக் கழக முன்னோடிகளில் ஒருவராக திகழ்ந்தவர்.**

**தஞ்சை நகரக் கழகப் பொறுப்பாளர், பொதுக்குழு உறுப்பினர், நகர்மன்றத் துணைத் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.**

**தலைவர் கலைஞர் இடும் கட்டளை எதுவானாலும் அதை அப்படியே ஏற்றுக் கொள்ளக்கூடியவர்.**

**கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**